தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014–2015)

(பதினான்காவது பேரவை)

ஆறாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 23 SEP 2015)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014–2015)

(பதினான்காவது பேரவை)



ஆறாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கம்
1.	2014–2015 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2.	முகவுரை	..	v

இணைப்பு

1.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் வாரியம்/நிறுவனம் ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	அ. தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம்	..	1999–2000 முதல் 2005–2006 வரை	-	3-4
	ஆ. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்	..	2009–2010	-	5
2.	வேளாண்மைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் கழகங்களின் ஆண்டறிக்கைகள் மற்றும் ஆண்டுக்கணக்குகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	அ. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம்	..	2001–2002 முதல் 2011–2012 வரை	-	6,7,8
	ஆ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்	–	2010-2011 மற்றும் 2011–2012	-	9
3.	எரிசக்தித்துறையின் பின்வரும் நிறுவனம்/கழகங்களின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	அ. தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம்	..	2009–2010	-	10
	ஆ. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்	..	2009–2010	-	11
	இ. தமிழ்நாடு தொடரமைப்புக் கழகம்	..	2009–2010	-	12


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014–2015)

(பதினான்காவது பேரவை)

(2014–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13–ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

1. *தலைவர்*

திரு. ஆர். சின்னசாமி

உறுப்பினர்கள்

2. திரு. ம. கலை அரசு
*3. திருமதி ர. சுபா
4. திரு. கா. தமிழரசன்
5. திரு. என்எஸ்என். நடராஜ்
6. திரு. கே.பி. நாகராஜன்
7. திரு. V.P. நாகைமாலி
*8. திரு. அ. பாஸ்கர்
9. டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்
10. திரு. இரா. மணிமாறன்
11. திரு. பொன். ராஜா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . . செயலாளர்

திரு. க. பூபதி . . . இணைச் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன் . . . குழு அலுவலர்

*19.2.2015 முதல் கூட்டத்தொடர் முடியும் வரை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014–2015)

(பதினான்காவது பேரவை)

ஆறாவது அறிக்கை

முகவுரை

2014–2015–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக ஆறாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2014–2015 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 13.8.2014 அன்று அமைக்கப்பெற்றது.

குழுக் கூட்டம்

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள் மற்றும் ஆண்டுக் கணக்குகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து 2.9.2015 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். குழுமுன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

21.09.2015–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
21.09.2015
மன்மத, புரட்டாசி 4,
திருவள்ளுவர் ஆண்டு–2046.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு


TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

1. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

வரிசை எண்.	வாரியத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம்	1999–2000	31.03.2001	11.08.2014	13 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்
		2000–2001	31.03.2002	11.08.2014	12 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்
		2001–2002	31.03.2003	11.08.2014	11 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்
		2002–2003	31.03.2004	11.08.2014	10 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்
		2003–2004	31.03.2005	11.08.2014	9 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்
		2004–2005	31.03.2006	11.08.2014	8 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்
		2005–2006	31.03.2007	11.08.2014	7 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நலவாரியத்தை பொறுத்தவரை 2000–ஆம் ஆண்டிலிருந்து 2007–ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் கணக்குகளை முடிக்கப்படாமலும் தணிக்கையாளர் நியமனம் செய்யப்பெறாமலும் இருந்துள்ளது. 1990–2000 முதல் 2005–2006 வரையிலான கணக்குகளை ஆய்வு செய்து இறுதி செய்ய தணிக்கையாளர் நியமனம் செய்யப்பட்டு கணக்குகளை முடிக்க ஐந்து ஆண்டுகாலம் ஆனது.

வாரியத்தின் ஆண்டுக்கணக்குகள் ஒற்றைப் பதிவு முறையில் (Single Entry System) பதிவு செய்யப்பட்டுள்ளதால் அதனை ஆய்வு செய்வது நடைமுறை சாத்தியமில்லை எனக் கருதப்பட்டு அப்பதிவுகள் இரட்டைப் பதிவு முறையாக (Double Entry System) மாற்றி பதிவு செய்யப்பட்டு, பட்டைய கணக்காளரால் கணக்குகள் இறுதி செய்தபின் 2012–ல் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அரசின் ஒப்புதலுக்குமுன் வாரியத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என்ற காரணத்தால் கணக்குகள் திருப்பி அனுப்பப்பட்டன. அவ்வமயம் வாரியம் செயல்பாட்டில் இல்லாத காரணத்தால் மீண்டும் வாரியம் அமைக்கப்பட்டு, ஆண்டுக்கணக்குகள் ஆய்வு செய்து ஒப்பளிக்கப்பட்டு 2014–ஆம் ஆண்டு அறிக்கைகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதன் பிறகே அவ்வறிக்கைகள் சட்டப்பேரவையில் வைக்கப்பெற்றன.

குழுவின் பரிந்துரை
(8)

அரசின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் தொழிலாளர் நல வாரியம் ஆண்டுக்கணக்குகளை உரிய நிதியாண்டிற்குள் முடிக்காமல் 1999–2000 முதல் 2005–2006 வரை ஐந்து ஆண்டுகாலம் கணக்குகளை முடிக்காமல் இருந்தது வருந்தத் தக்கது.

இத்தகைய காலதாமதத்தை தவிர்க்கவும் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் இது போன்ற நிறுவனங்களின் கணக்குகளை சரியார்க்கவும், உரிய காலத்தில் தணிக்கை செய்யவும், ஆண்டறிக்கைகளை பேரவைக்கு உரிய காலத்தில் அளிக்கவும் துணைச் செயலாளர் நிலையில் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) நியமிக்கப் பெறவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆ.	அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்	2009–2010	31.03.2011	1.08.2014	3 வருடங்கள் 4 மாதங்கள்

துறையின் பதில்
(7)

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 2009–2010–ஆம் ஆண்டு அலுவலகம் இடமாற்றம் காரணமாக தகவல்கள் miss-ஆகி உள்ளது. ஆண்டுக்கணக்குகளை பொறுத்தவரை, 2011–லேயே நிறுவனத்தால் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன, மூன்று வருடங்கள் கழித்து தாமதமாக சமர்ப்பித்தது துறையினுடைய தவறுதான். அதற்கு பிந்தைய ஆண்டுகளில் மூன்று வருடங்களுக்கு சரியாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை
(8)

சட்டமன்றப் பேரவையில் நடப்பு ஆண்டின் அறிக்கையை வைப்பதே சரியான முறையாகவும், உபயோகமாகவும் இருக்கும் எனவும் முந்தைய ஆண்டிற்குரிய அறிக்கையை வைக்காமல் பின்னர் வந்த ஆண்டுகளுக்குரிய அறிக்கைகளை வைப்பது தவறு எனவும் தற்போது உள்ள கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கைகளை உரிய காலத்திற்குள் பேரவையில் வைக்க வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் இது போல் காலதாமதம் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குழு வலியுறுத்துகிறது.

மேலும், துறையில் ஒரு துணைச் செயலாளர் பதவி நிலையில் ஒரு ஒருங்கிணைப்பு அதிகாரியை (Nodal Officer) நியமித்து அனைத்து நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளையும் உரிய காலத்தில் பேரவைக்கு சமர்ப்பிக்க கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

2. வேளாண்மைத் துறை

வரிசை எண்.	கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம்	2001–2002	31.03.2003	2.05.2013	10 வருடங்கள் 1 மாதம் 1 நாள்
		2002–2003	31.03.2004	2.05.2013	9 வருடங்கள் 1 மாதம் 1 நாள்
		2003–2004	31.03.2005	2.05.2013	8 வருடங்கள் 1 மாதம் 1 நாள்
		2004–2005	31.03.2006	2.05.2013	7 வருடங்கள் 1 மாதம் 1 நாள்
		2005–2006	31.03.2007	16.07.2014	7 வருடங்கள் 4 மாதங்கள் 15 நாட்கள்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	2006–2007		31.03.2008	16.07.2014	6 வருடங்கள் 4 மாதங்கள் 15 நாட்கள்
	2007–2008		31.03.2009	16.07.2014	5 வருடங்கள் 4 மாதங்கள் 15 நாட்கள்
	2008–2009		31.03.2010	16.07.2014	4 வருடங்கள் 4 மாதங்கள் 15 நாட்கள்
	2009–2010		31.03.2011	16.07.2014	3 வருடங்கள் 4 மாதங்கள் 15 நாட்கள்
	2010–2011		31.03.2012	16.07.2014	2 வருடங்கள் 4 மாதங்கள் 15 நாட்கள்
	2011–2012		31.03.2013	16.07.2014	1 வருடம் 4 மாதங்கள் 15 நாட்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதில் (7)	குழுவின் பரிந்துரை (8)
தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தினைப் பொறுத்தவரையில் வடபாதிமங்கலத்தில் உள்ள சர்க்கரை ஆலை 1988–ஆம் ஆண்டு மூடப்பட்டது. மேலும் கரும்பு பண்ணைக் கழகத்திற்கு சொந்தமான நிலங்கள் வருவாய் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூடுதல் பொறுப்பு வகித்த தஞ்சாவூர் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அவர்களுக்கு கழகம் மூடப்பட்டு உரிய ஆணை வெளியிடும் வரை ஆண்டுக்கணக்குகளை பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நடைமுறைகள் தெரியாததால் ஆண்டுக்கணக்குகளை சமர்ப்பிக்காமல் இருந்துள்ளார்.	எதிர்வருங்காலங்களில் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் இது போன்ற நிறுவனங்கள் மூடப்பட்டாலும் மூடப்பட்டதற்கான ஆணைகள் வெளியிடப்பெறும் வரை அவற்றின் ஆண்டுக்கணக்குகளை தாமதமின்றி சட்டமன்றப் பேரவைக்கு சமர்ப்பிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை ஏண்.	கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆ.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்	2010–2011	31.03.2012	11.08.2014	2 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்
		2011–2012	31.03.2013	8.12.2014	1 வருடம் 8 மாதங்கள் 7 நாட்கள்

துறையின் பதில்
(7)

அதிகப்படியான வணிக நடவடிக்கையினாலும், சில கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வந்த ஆண்டுக் கணக்குகள் சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்பின் கீழ் தவறாக வகைப்பாடு செய்யப்பட்டதாலும், அதனை சீர்படுத்தி ஒப்பு நோக்கப்பட்டு, ஆய்வுக்கு முழுமையாக அனுப்பப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது. மேலும், உள்ளாட்சி தணிக்கை அலுவலகத்தில் போதுமான அலுவலர்கள் இல்லாததாலும் காலதாமதம் ஏற்பட்டது. இனி வருங்காலங்களில் அறிக்கைகள் உரிய காலத்திற்குள் பேரவைக்கு அளிக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

நிர்வாக ரீதியான இடர்பாடுகளை களைவதற்கு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆண்டுக்கணக்குகள் மற்றும் அதன் மீதான தணிக்கை அறிக்கைகளை காலதாமதமின்றி பேரவைக்கு அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

3. எரிசக்தித்துறை

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	மின்சார வாரிய நிறுவனம்	2009–2010	31.03.2011	11.08.2014	3 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு மின்சார வாரியம் 2003–ஆம் ஆண்டில் அரசு துறையாக இயங்கியது. 2009–2010 ஆம் ஆண்டில்தான் நிறுவனமாக மாற்றப்பட்டது. மாற்றப்பட்ட பிறகு, 2009–2010–ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை மறு சீரமைத்து, தமிழ்நாடு மின்சார வாரியம் என்ற உடைமை நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய இரண்டு துணை நிறுவனங்களாக உருவாக்கியது. மூன்று நிறுவனங்களும் ஆரம்ப கட்ட நிலை என்பதால் அதற்குரிய வழிமுறைகள் மற்றும் சட்டரீதியான தணிக்கையாளரின் தணிக்கை முதன்முறை என்பதாலும், இந்திய முதன்மை கணக்காயர் தலைமை அலுவலரின் தணிக்கை குறிப்புகளை பெறுவதற்கான வழிமுறைகளை மூன்று நிறுவனத்திற்கும் செயல்படுத்துவதிலும் காலதாமதம் ஏற்பட்டது.

இனி வருங்காலங்களில் ஆண்டறிக்கைகளை குறித்த காலத்திற்குள் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

இதற்கு முந்தைய நேர்வுகளிலும் இத்தகைய காலதாமதங்களை தவிர்க்க வேண்டுமென குழு தனது பரிந்துரை அளித்துள்ள போதிலும் தொடர்ந்து அறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெறுவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு வலியுறுத்துகிறது.

மேலும், ஆண்டறிக்கைகள் உரிய காலத்தில் பேரவைக்கு சமர்ப்பிப்பதை கண்காணிக்க துறை அளவில் துணைச் செயலாளர் பதவியில் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) நியமனம் செய்ய குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆ.	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்	2009–2010	31.03.2011	11.08.2014	3 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு மின்சார வாரியம் 2003–ஆம் ஆண்டில் அரசு துறையாக இயங்கியது. 2009–2010 ஆம் ஆண்டில்தான் நிறுவனமாக மாற்றப்பட்டது. மாற்றப்பட்ட பிறகு, 2009–2010–ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை மறு சீரமைத்து, தமிழ்நாடு மின்சார வாரியம் என்ற உடைமை நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய இரண்டு துணை நிறுவனங்களாக உருவாக்கியது. மூன்று நிறுவனங்களும் ஆரம்ப கட்ட நிலை என்பதால் அதற்குரிய வழிமுறைகள் மற்றும் சட்டரீதியான தணிக்கையாளரின் தணிக்கை முதன்முறை என்பதாலும், இந்திய முதன்மை கணக்காயர் தலைமை அலுவலரின் தணிக்கை குறிப்புகளை பெறுவதற்கான வழிமுறைகளை மூன்று நிறுவனத்திற்கும் செயல்படுத்துவதிலும் காலதாமதம் ஏற்பட்டது.

இனி வருங்காலங்களில் ஆண்டறிக்கைகளை குறித்த காலத்திற்குள் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

இதற்கு முந்தைய நேர்வுகளிலும் இத்தகைய காலதாமதங்களை தவிர்க்க வேண்டுமென குழு தனது பரிந்துரை அளித்துள்ள போதிலும் தொடர்ந்து அறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெறுவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு வலியுறுத்துகிறது.

மேலும், ஆண்டறிக்கைகள் உரிய காலத்தில் பேரவைக்கு சமர்ப்பிப்பதை கண்காணிக்க துறை அளவில் துணைச் செயலாளர் பதவியில் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) நியமனம் செய்ய குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
இ.	தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்	2009–2010	31.03.2011	11.8.2014	3 வருடங்கள் 4 மாதங்கள் 10 நாட்கள்

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு மின்சார வாரியம் 2003–ஆம் ஆண்டில் அரசு துறையாக இயங்கியது. 2009–2010 ஆம் ஆண்டில்தான் நிறுவனமாக மாற்றப்பட்டது. மாற்றப்பட்ட பிறகு, 2009–2010–ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை மறு சீரமைத்து, தமிழ்நாடு மின்சார வாரியம் என்ற உடைமை நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய இரண்டு துணை நிறுவனங்களாக உருவாக்கியது. மூன்று நிறுவனங்களும் ஆரம்ப கட்ட நிலை என்பதால் அதற்குரிய வழிமுறைகள் மற்றும் சட்டரீதியான தணிக்கையாளரின் தணிக்கை முதன்முறை என்பதாலும், இந்திய முதன்மை கணக்காயர் தலைமை அலுவலரின் தணிக்கை குறிப்புகளை பெறுவதற்கான வழிமுறைகளை மூன்று நிறுவனத்திற்கும் செயல்படுத்துவதிலும் காலதாமதம் ஏற்பட்டது.

இனி வருங்காலங்களில் ஆண்டறிக்கைகளை குறித்த காலத்திற்குள் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

இதற்கு முந்தைய நேர்வுகளிலும் இத்தகைய காலதாமதங்களை தவிர்க்க வேண்டுமென குழு தனது பரிந்துரை அளித்துள்ள போதிலும் தொடர்ந்து அறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெறுவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு வலியுறுத்துகிறது.

மேலும், ஆண்டறிக்கைகள் உரிய காலத்தில் பேரவைக்கு சமர்ப்பிப்பதை கண்காணிக்க துறை அளவில் துணைச் செயலாளர் பதவியில் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) நியமனம் செய்ய குழு பரிந்துரை செய்கிறது.